இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 10.02.2026

# பா.ஜ.க. வந்தால் பற்றி எரியும்...

**பா.**ஜ.க. வந்தால் பற்றி எரியும் என்பதற்கு நிரந்தரமான எடுத்துக் காட்டாக இருக்கிறது மணிப்பூர் மாநிலம்.

**மூன்று ஆண்டுகளாக எரிகிறது மணிப்பூர். பா.ஜ.க. ஆளும் மாநிலம் அது. வன்முறையை அடக்க முடியாத நிலையில் ஆட்சியை விட்டு விலகி னார் பா.ஜ.க. முதலமைச்சர் பிரேன் சிங். உண்மையில் பார்த்தால் அந்த ஆட்சியையே கலைத்திருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை ஒன்றிய பா.ஜ.க. தலைமை. சட்டமன்றத்தை முடக்கி வைத்திருந்தார்கள். சில நாட்களுக்கு முன்னால் மணிப்பூர் சட்டமன்றத்தை மீண்டும் செயல்பட வைத்தது பா.ஜ.க. தலைமை. மணிப்பூர் மாநிலத்தில் புதிய அரசு பதவி யேற்ற நிலையில், அங்கு மீண்டும் வன்முறை வெடித்துள்ளது. லேசான அமைதி சிதைந்து, மீண்டும் பற்றி எரியத் தொடங்கி இருக்கிறது.**

மணிப்பூரில் 2023 ஆம் ஆண்டு இரண்டு சமூகங்களுக்கு இடையே கடுமையான மோதல் ஏற்பட்டது. கலவரத்தில் இதுவரை 260க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் தங்கள் வீடுகளை இழந்தனர். பல்லாயிரக்கணக்கானவர்கள் இடம் பெயர்ந்தார் கள். ஆயிரக்கணக்கானவர்கள் அந்த மாநிலத்தை விட்டு வெளியேறி னார்கள். காவல் துறை மொத்தமாக செயல் இழந்தது. காவல் நிலை யங்களில் இருந்த துப்பாக்கிகளை வன்முறை கும்பல் எடுத்துச் சென்றது. துப்பாக்கிகளைக் கொண்டு வந்து கொடுங்கள் என்று காவல் துறை அறிவித்த அவலம் மணிப்பூரில்தான் நடந்தது.

**பா.ஜ.க. முதலமைச்சர் பிரேன்சிங், செயல்படாமல் இருந்தார். பா.ஜ.க.வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் டெல்லிக்குச் சென்று பா.ஜ.க. தலைமையிடம் பா.ஜ.க. மாநில அரசையே குறை சொன்னார்கள். அதன்பிறகுதான் அக்கட்சியின் முதலமைச்சர் பிரேன்சிங் பதவி விலகினார். ஒன்று வேறு முதலமைச்சரை அப்போதே தேர்வு செய்திருக்க வேண்டும். அல்லது அந்தச் சட்டசபையை முழுமையாக கலைத்திருக்க வேண்டும்.**

மிகத் தந்திரமாகச் செயல்பட்டது பா.ஜ.க. தலைமை. எதிர்ப்புகளைச் சமாளிக்க இருந்த முதலமைச்சரை பதவி விலக வைத்து விட்டு, சட்ட சபையை எப்போது வேண்டுமானாலும் செயல்பட வைத்து, பா.ஜ.க. ஆட்சியை மீண்டும் உருவாக்க நினைத்தார்கள்.

ஆறு மாதங்கள் குடியரசு தலைவர் ஆட்சி அமல் ஆனது. பின்னர் மீண்டும் ஆறு மாதத்துக்கு நீட்டித்தார்கள். கலவரம், வன்முறை ஓய்ந்து விட்டதாக நினைத்து மீண்டும் ஆட்சி அமைக்க பா.ஜ.க. முயற்சித்தது.

மெய்தி, குகி இனங்களை சேர்ந்த பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள், கூட்டணி கட்சி மற்றும் சுயேச்சை எம்.எல்.ஏ.க்களிடம் பா.ஜ.க. மேலிட பொறுப்பாளர் கருத்து கேட்டார். பின்னர் டெல்லியில் உள்ள பா.ஜ.க. தலைமை அலுவலகத்தில் மணிப்பூர் பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடந்தது. முதல்வர் பொறுப்பை ஏற்கும் வகையில், சட்டசபை தலைவ ராக ஒய்.கெம் சந்த் சிங் தேர்வு செய்யப்பட்டார்.

அவருடன் நெம்சா கிப்கென், லோசி திகோ ஆகியோர் துணை முதல் வராக நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் குகி பழங்குடி இனத்தை சேர்ந்த முன்னாள் பெண் அமைச்சர் நெம்சா கிப்கென் துணை முதல்வராக சேர்ந்ததை பலரும் எதிர்க்கிறார்கள். பிறகு அவர்கள் பதவியேற்று கொண்டனர்.

குகி சமூகத்தை சேர்ந்தவர்கள், பா.ஜ.க. தலைமையிலான அமைச் சரவையில் இணைந்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். குகி சமூகத்தினர் பெரும்பான்மையாக வசிக்கும் பல பகுதிகளில் மக்கள் வீதி களில் இறங்கி போராட்டத்தில் குதித்து இருக்கின்றனர். போராட்டக்காரர் கள் டயர்களுக்கு தீ வைத்ததோடு சாலை மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

ஆட்சி அமைக்க உரிமை கோரியபோது, குகி பழங்குடியின எம்.எல்.ஏ. என்.சனதே, ஜோ ஹமர் பழங்குடியின எம்.எல்.ஏ. எல்.எம். காவுதே ஆகியோர் உடன் இருந்தனர். சட்டசபை கூட்டத்தில் காணொலி காட்சி மூலம் பங்கேற்றனர். இதனை அந்த இன மக்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள். குகி, ஜோ ஹமர் பழங்குடியினத்தினர் பெரும்பான்மை யாக வசிக்கும் சுரசந்த்பூர் மாவட்டத்தில் முழு அடைப்பு நடத்தப்பட்டது. கைகளில் கட்டைகளை ஏந்திக்கொண்டு மாவட்ட தலைநகரில் வாகனங்களை தடுத்து நிறுத்தினார்கள் போராட்டக்காரர்கள்.

துய்போங் வனத்துறை கேட் அருகே வன்முறை கும்பலுக்கும், பாது காப்பு படையினருக்கும் இடையே மோதல் வெடித்தது. கும்பல் கற்களை வீசியது. அதனால், பாதுகாப்பு படையினர் தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் கும்பலை கலைத்தனர். அதிகாலைவரை மோதல் நீடித்தது.

20 மாதங்கள் கழித்துதான் பதவி விட்டு விலகினார் முந்தைய முதலமைச்சர் பிரேன்சிங். இன்றைய முதலமைச்சர் பதவி ஏற்ற அன்றே வன்முறை அரங்கேறி இருக்கிறது. புதிய அரசில் இணைந் துள்ள குக்கி எம்.எல்.ஏக்களை “சமூகப் புறக்கணிப்பு” செய்ய வேண்டும் என அழைப்பும் விடுக்கப்பட்டுள்ளது. ‘அடுத்து நடக்க இருக்கும் விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பு’ என்று அறிவித்துள்ளார்கள். எனவே வன்முறை இப்போதைக்கு நிற்கும் எனத் தெரியவில்லை.

**மணிப்பூரில் எப்படியாவது பா.ஜ.க. ஆட்சி அமைத்து விட வேண்டும், பா.ஜ.க.வைச் சேர்ந்தவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்க வேண்டும் என்று நினைத்தார்களே தவிர, மணிப்பூர் பிரச்சினையை தீர்க்க முயலவில்லை. உண்மையான பிரச்சினை என்ன, அதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற எந்த ஆலோசனையும் செய்யவில்லை.**

**மணிப்பூர் மலைவாழ் பழங்குடி மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கு, வாழ்வாதாரம் மேம்பாட்டுக்கு எதையும் செய்யவில்லை. காடுகள் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரால், மலைவாழ் மக்களை வதைத்தார்கள். மலைவாழ் மக்களது வாழுமிடங்களில் உள்ள வீடுகளை இடித்தார்கள். மலைவாழ் மக்கள் கஞ்சா பயிரிடுவதாகச் சொல்லி தொடர்ந்து ஒடுக்கி னார்கள். பா.ஜ.க.வைச் சேர்ந்த மலைவாழ் இன எம்.எல்.ஏ.க்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கூட பா.ஜ.க. தலைமை செவிமடுக்கவில்லை. பிறகு எப்படி அமைதி திரும்பும்?**

**பா.ஜ.க. இருந்தால் எரியும், மீண்டும் வந்தாலும் எரியும் என்பதைத் தான் மணிப்பூர் காட்டுகிறது.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.2.2026) சென்னையில் நடைபெற்ற, அப்பல்லோ ஹனிஃபா அவர்களின் மகள் அஸ்ரா – கமர் ஆதில் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜே.எம்.ஆரூண் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரதமருக்கு கடிதம்!

முதல் பக்கத் தொடர்ச்சி...

**குமரி - திருவனந்தபுரம் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படவில்லை!**

‘திருவனந்தபுரம் - கன்னியாகுமரி இடையேயான அகல இரயில் பாதை இரட்டிப்பு’ திட்டத்திற்கான 16.86.51 ஹெக்டேர் நில எடுப்புப் பணி முடிக்கப்படாமல் இருப்பது இதற்கு ஒரு பொருத்தமான உதாரணம் என்று சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், இத்திட்டத்திற்கான நில எடுப்பிற்கு உரிய இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான 289.78 ரூபாய் கோடி நிதியினை இரயில்வே துறை இன்னும் ஒதுக்கவில்லை என்றும், இது தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ஒரு பெரிய திட்டம் என்றும், இது ஒன்றிய அரசின் திட்டக் கண்காணிப்புக் குழுவின் (PMG) வலைதளத்தின் மூலம் கண்காணிக்கப் படுகிறது என்றும் தெரிவித்துள்ளார். நிலம் கையகப்படுத்துதலுக்கான நிதியை பகுதி, பகுதியாக வழங்குவதற்குப் பதிலாக, மொத்தமாக, சரியான நேரத்தில் ஒதுக்குவதன் மூலம், இந்த முக்கியமான திட்டங்களைத் தடையின்றி விரைவாக முடிக்க முடியும் என்று தனது கடிதத்தில் அவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு, இரயில்வே திட்டங்களுக்கு உயரிய முன்னுரிமை அளித்து, வலுவான தொரு கண்காணிப்பு வழிமுறையினை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள சிக்கல்களைத் தீர்க்கவும், நிலுவையில் உள்ள திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்துவதை விரைவு படுத்தவும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரும், போக்குவரத்துத் துறை செயலாளரும் இரயில்வே அதிகாரிகளுடன் தொடர்ந்து மாதாந்திர ஒருங்கிணைப்பு கூட்டங்களை நடத்தி வருவதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு குறைவாகவே உள்ளது!**

இந்தத் தருணத்தில், சமீபத்திய ஆண்டு களில் தமிழ்நாட்டிற்கு புதிய இரயில்வே திட்டங்களுக்கான ஒதுக்கீடு ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பது குறித்து தாம் கவலையோடு குறிப்பிட விரும்புவதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்திய அளவில் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாகவும், உற்பத்தி மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கான முக்கிய மையமாகவும் விளங்கும் தமிழ்நாடு, தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்குத் தொடர்ந்து கணிசமான பங்களிப்பை வழங்கி வருகிறது என்றும், மேம்பட்ட இரயில் இணைப்பு மற்றும் உள்கட்டமைப்பு மூலம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை மேலும் வலுப்படுத்தும் மகத்தான ஆற்றலை தமிழ்நாடு கொண்டுள்ளதாகவும் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு,

- நில எடுப்பு மற்றும் இழப்பீடு வழங்குவதை விரைவுபடுத்திட ஏதுவாக, அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்குத் தேவையான நிதியை தாமதமின்றி, முழுமையாக, முன்னுரிமை அடிப்படையில் விடுவிக்கவும்;
- இரயில்வே துறையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முக்கியமான திட்டங்களான தூத்துக்குடி - மதுரை (அருப்புக்கோட்டை வழியாக) புதிய அகலப்பாதை மற்றும் திண்டிவனம் - திருவண்ணாமலை அகலப்பாதை (ஏற்கெனவே 931.52.96 ஹெக்டேர் நிலத்தைக் கையகப்படுத்த நிருவாக அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன) திட்டங்களை மீண்டும் தொடங்கிடவும், இதற்குத் தேவையான நிதியினை வழங்கிடவும்;
- தமிழ்நாட்டின் பொருளாதார நிலை மற்றும் வளர்ச்சித் தேவைகளுக்கு ஏற்ப, கூடுதலாக புதிய இரயில் திட்டங்களை அனுமதிப்பது குறித்து பரிசீலித்திடவும்;

**தமிழ்நாடு அரசு அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கும்!**

இந்தியப் பிரதமர் அவர்கள் தலையிட்டு, ஒன்றிய இரயில்வே அமைச்சகத்திற்கு உரிய அறிவுரைகளை வழங்கிட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார். இந்தியப் பிரதமர் அவர்களின் தலையீடு, கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்துவதோடு, ஒன்றிய மற்றும் மாநில அரசின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க உதவிடும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இரயில்வே திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்பு களையும் வழங்க தமிழ்நாடு அரசு முழுமையாக உறுதிபூண்டுள்ளது என்று தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இதுதொடர்பாக இந்தியப் பிரதமர் அவர்களிடமிருந்து விரைவில் சாதகமான நடவடிக்கையை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## திருச்சியில் பிரம்மாண்ட வேலைவாய்ப்பு முகாம் :

# 11 ஆயிரம் பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் கே.என்.நேரு வழங்கி சிறப்புரை!

*திருச்சி, பிப்.10-*

*திருச்சி கேர் (CARE) கல்லூரியில், தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களின் முன்னெடுப்பிலும், நேரடி மேற்பார்வையிலும் பிரம்மாண்ட தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.*

*கிவ் லைஃப் (Give Life) மற்றும் தி ரைஸ் (The Rise) அறக்கட்டளைகளின் ஒருங்கிணைப்பில் இந்த முகாம் நடத்தப்பட்டது.*

*இம்முகாமில் 17,000க்கும் மேற்பட்ட வேலை தேடும் இளைஞர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.*

**இந்த நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சியர் சரவணன்,**

*வேலைவாய்ப்பு கிடைத்த பின்பும் அனைவரும் விடா முயற்சி, சுய ஒழுக்கம், சுய மதிப்பீடோடு வாழவேண்டும், புதியவற்றை தொடர்ந்து கற்று கொள்ள வேண்டும் என்றார்.*

**பெரம்பலூர் எம்.பி. அருண் நேரு பேசுகையில்,**

*திருச்சியில் அனைத்து வாய்ப்புகளும், திறமைகளும் உள்ள பகுதி. அனைத்து தொழில் நிறுவனங்களுக்கும் திருச்சி மைய கேந்திரமாக விளங்கும். எனவே இதனை பயன்படுத்தி அனைத்து தொழில் நிறுவனங்களும் திருச்சிக்கு வர வேண்டும். மாவட்ட நிர்வாகமும், அரசும் அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கும் என்றார்.*

**நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு பேசுகையில்,**

*இன்றைய நாள் எனக்கு வாழ்க்கையை மிகவும் சிறப்பான நாளாக உள்ளது. பலருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதில் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. என்னுடைய சகோதரர் ராமஜெயம் பல எதிர்பார்ப்புகளோடு இந்த கல்லூரியை கட்டினார். அந்த எதிர் பார்ப்புகள் இன்று நிறை வடைந்துள்ளது என்றார்.*

*டாட்டா எலக்ட்ரானிக்ஸ், ஸ்னைடர் எலக்ட்ரிக், MRF, ஹூண்டாய், யூனோ மிண்டா மற்றும் திருச்சியின் முன்னணி நிறுவனமான வி.டாட் (V.Dot) உள்ளிட்ட 327 நிறுவனங்கள் கலந்து கொண்டன. மொத்தம் 21,000க்கும் அதிகமான காலிப் பணியிடங்களுடன் நிறுவனங்கள் வருகை தந்திருந்தன.*

*பங்கேற்றவர்களில் சுமார் 11,000 பேருக்கு உடனடியாக பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. மேலும் பலர் இரண்டாம் சுற்று நேர்காணலுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.*

*இந்த முகாமில் 10,000க்கும் மேற்பட்ட இளம் பெண்கள் கலந்து கொண்டது, சமூகத்தில் பெண்களின் பொறுப்புணர்வையும் முன்னேற்றத்தையும் பறைசாற்றுவதாக அமைந்தது. ஆண்டுக்கு ரூ. 10 லட்சம் முதல் ரூ. 17 லட்சம் வரை ஊதியம் வழங்கும் 20க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் பங்கேற்றது இம்முகாமின் தனிச்சிறப்பாகும்.*

*திருச்சி மட்டுமன்றி தஞ்சை, கும்பகோணம், திருவாரூர், பெரம்பலூர், மதுரை, கரூர், திண்டுக்கல் உள்ளிட்ட அண்டை மாவட்ட இளைஞர்களும் பெருமளவில் பங்கேற்றதால், இது காவிரி நிலப்பரப்பின் மிகப் பெரிய வேலைவாய்ப்பு திருவிழாவாக மாறியது.*

*இம்முகாமில் வேலை கிடைக்காத இளைஞர்களுக்குத் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களையும் வேலையில் அமர்த்த கிவ் லைஃப் மற்றும் தி ரைஸ் அறக்கட்டளைகள் முயற்சி மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் சரவணன், மாநகராட்சி ஆணையர் மதுபாலன், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, கேர் கல்லூரி நிர்வாக இயக்குனர் பிரதீப் செந்தில், மாருதி மருத்துவமனை நிர்வாகி டாக்டர் ஆனந்த், ரைஸ் இயக்கத்தின் தலைமை பொறுப்பாளர் ஜெகத் கஸ்பர், தொழில் அதிபர் மணி வண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

# கேள்விக் கென்ன பதில் ?

**பாமரனின் கேள்வி:**

பிரதமர் மோடி, அமெரிக்காவுக்கும் சீனாவுக் கும் ஏன் இப்படி அஞ்சி நடுங்குகிறார் ?

**சுப்ரமணியன்சாமியின் பதில்: :**

“பிரதமர் மோடியின் வண்டவாளங்களை தண்டவாளத்தில் ஏற்றியுள்ளார் சுப்பிர மணியன்சாமி.

பிரதமர் மோடி குறித்து சுப்பிரமணியன் சாமி அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட் டுள்ளார்.

**"சீனாவும் அமெரிக்காவும் மோடியின் ஆவணங் களை வைத்திருக்கின்றன, அதனால்தான் மோடி இந்த நாடுகளுக்கு அஞ்சுகிறார்."**

**“மோடி முதல்வராக இருந்தபோது, ஆடம்பரம் மற்றும் உல்லாசத்திற்காக 16 முறை சீனா சென்றார். ஜெய்சங்கர் அவரது உல்லாச ஆடம்பரங்களை நிர்வகித்து வந்தார்.”**

என்ற சாமியின் பதில் வலை தளங்களில் வலம் வருகிறது !